# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
...
## IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai
## STC No.417/2023

Deposition of the witness for Prosecution **PW** 3
Name : முத்துவேல்

Father's/Husband's Name :

Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (19.09.2025)

**<u>சாட்சி மனுவின்பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.</u>**

எனது உறுதி கூட்டில் நவநீத கிருஷ்ணனுடன், நானும் இருந்ததாக சொல்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கின் விவரம் எனக்கும், அவருக்கும் நன்கு தெரியும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நானும், நவநீதகிருஷ்ணனும் தான் நேரடி சாட்சி என்றால் சரிதான். அவர் சொன்னதன் அடிப்படையில் தான் நானும் சொல்கிறேன் என்றால் சரிதான். நாங்கள் இருவரும் சேர்ந்துதான் இருந்தோம். நான் தனியாக எதிரியை பார்க்கவோ, பேசவோ இல்லை என்றால் சரிதான். என்னை நவநீதகிருஷ்ணன்தான் உடன் கூப்பிட்டு சென்றார் என்றால் சரிதான். நாங்கள் சென்று தான் காசோலையை வாங்கினோம். நான் காசோலையை மட்டும் தான் வாங்கினேன். எதுவும் கொண்டு போகவில்லை என்றால் புரோநாட்டை கொடுத்துவிட்டு காசோலை வாங்கினோம்.புரோநோட்டு இருக்கும்பொழுது ஏன் காசோலை வாங்குகிறீர்கள் என்று நான் கேட்கவில்லை என்றால் சரிதான். PW2 சாட்சியமளிக்கும்பொழுது நான் வெளியில் தான் இருந்தேன் என்றால் சரிதான். வாதி வசந்தகுமாரை எனக்கு எப்படி தெரியும் என்றால் வசந்தகுமாரும், சீனிவாசனும் எனக்கு நண்பர்கள், அப்படி இருக்கும் பொழுது நான் ஏன் மற்றொரு நண்பருக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் பணம் வாங்கியது உண்மை, அதனால் சாட்சியமளிக்கிறேன்.

நான் நண்பர் என்பதால், வசந்தகுமாருக்கும், எதிரிக்கும் இடையே உள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் நான் சமீப காலமாகத் தான் நண்பர் ஆவேன். வசந்தகுமாருக்கும், எதிரிக்கும் இடையே கார் வாங்கிய விவரம் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். அவர்களுக்குள் என்னென்ன வரவு செலவுகள் இருக்கிறது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த விவரங்கள் எல்லாம் தெரியாத பட்சத்தில் நான் வசந்தகுமாருக்கு ஆதரவாகவும், மற்றொரு நண்பருக்கு எதிராகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே சட்டப்படி நிறைவேற்றக்கூடிய புரோநோட்டு இருக்கும் பொழுது அதை திரும்ப பெற்றுக் கொண்டு, இந்த காசோலை கொடுத்தார் என்று நான் சொல்வது வழக்கு மூலம் ஏற்படுத்துவதற்காக வாதியுடன் சேர்ந்து கொண்டு நான் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி செல்போன் கடை வைத்துள்ளார், அது எனக்கு தெரியும். அவருக்கு அந்த கடை மூலம் வருமானம் வருகிறது என்றால் சரிதான். அவ்வாறு எதிரிக்கு கடை மூலம் வருமானம் வருவதால், அவர் வாதியிடம் பணம் வாங்க வேண்டிய அவசிய தேவை எதுவும் இல்லை என்றாலும் சரியல்ல. அதனால் எதிரியின் மீது பதிவு செய்யப்பட்ட இந்த பொய் வழக்கானது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.09.19 11:58:27 +0530

District Munsif cum Judicial Magistrate,
Shenkottai

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai**
**STC No.417/2023**

Deposition of the witness for Prosecution **PW** 2
Name : நவநீதகிருஷ்ணன்

Father's/Husband's Name :

Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (19.09.2025)

**சாட்சி மனுவின்பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

எனக்கு ஆஜர் எதிரியை எந்த வகையில் தெரியும் என்றால் எனக்கு அவர் பழக்கம், எப்படி பழக்கம் என்றால் பள்ளிக்கூடத்தில் எனக்கு அவர் சீனியர் ஆவார். நான் ஜூனியர் ஆவேன். அவரது அண்ணன் எனக்கு பழக்கமானவர், அதனால் நட்பு ரீதியாக கடையில் சென்று பேசுவேன், பழகுவேன். எனக்கு வாதியை எப்படி தெரியும் என்றால் அவர் எங்கள் தெருவுக்கு பக்கத்து தெருவில் வசித்து வருகிறார். அவர் என்ன வேலை செய்கிறார் என்றால் ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறார், வீடு வாடகைக்கு விட்டுள்ளார். நானும் ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறேன் என்றால் இல்லை. விவசாயம் செய்து வருகிறேன். எதிரி என்ன வேலை பார்க்கிறார் என்று எனக்கு தெரியுமா என்றால் செல்போன் கடை வைத்துள்ளார். வசந்தகுமாரும், சீனிவாசனம் முன்பே பழக்கமானவர்கள் என்றால் சரிதான். அவர்கள் இருவரும் பள்ளியில் ஒன்றாக படித்த நண்பர்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் சீனிவாசன் படித்த பள்ளிக்கூடத்தில் தான் அவருக்கு சீனியர் என்றால் சரிதான். அவர் எனக்கு ஜீனியர் என்று தெரியும், ஆனால் வசந்தகுமாரும், அவரும் நெருங்கிய நண்பர்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது.

இந்த வழக்கு விபரங்கள் தெரியுமா என்றால் தெரியும். வசந்தகுமார் நான்கு லட்சம் ரூபாய் சீனிவாசன் வாங்கியதாக வழக்கு போட்டுள்ளார். நான்கு லட்ச ரூபாயை எந்த தேதியில், எங்கு

வைத்து வாங்கினார் என்றால் 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், தேதி எனக்கு சரியாக ஞாபகம் இல்லை என்ன தேவைக்கு வாங்கினார் என்றால் அவருடைய வீட்டு அம்மாவிற்கு உடல்நிலை சரியில்லாததால் வாங்கினார். பணம் வாங்கும்போது நான் உடன் இருந்தேன். பணம் வாங்கும்போது அதற்கு ஈடாக என்ன கொடுத்தார் என்றால் புரோநோட்டு கொடுத்தார். புரோ நோட்டு கொடுத்தது எந்த தேதி என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். வசந்தகுமார் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எந்த தேதியில் அனுப்பினார் என்றால் எனக்கு தெரியாது. அதில் சீனிவாசன் என்ன விவரம் கூறி பதில் அனுப்பினார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

எனது உறுதிகூற்றில் சமாதானம் பேசுவதாக சொல்லியுள்ளதில் யார் யாரிடம் பேசினார்கள் என்றால் நானும், முத்துவேலுவும் சென்று சீனிவாசனிடம் பேசினோம். எங்கு வைத்து பேசினோம் என்றால் சீனிவாசன் வீட்டில் வைத்துதான் பேசினோம். எந்த தேதி என்று சரியாக ஞாபகம் இல்லை. அது என்ன கிழமை என்றால் ஞாபகம் இல்லை. சமாதானம் பேசியது, வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்புவதற்கு முன்பாகதான் சென்று பேசினோம் என்றால் எனக்கு தெரியாது. சீனிவாசன் வசந்தகுமாருக்கு ஒரு காரை இரண்டாவதாக வாங்கி கொடுத்திருந்தார், அந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்தக் காரை எடுத்துச் செல்லும் பொழுது விபத்து ஏற்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த விபத்து சம்பந்தமாக தென்காசி நீதிமன்றத்தில் நிறைவேற்றுதல் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருப்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சமாதானம் பேசி முடித்து வையுங்கள் என்று என்னிடம் யார் கூறினார் என்றால் வசந்தகுமார்தான் கூறினார். சீனிவாசன் தான் சமாதானம் பேச சொன்னார் என்று நிரூபண வாக்குமூலத்தில் நான் சொல்லியிருந்தால் அது பொய் என்றால் சரிதான். வசந்தகுமார், சீனிவாசனுக்கு வக்கீல் அறிவிப்பு அனுப்பியிருந்தது எதுவும் தெரியாது என்றால் சரிதான். அது பற்றிய விவரங்களை நான் உறுதிகூற்றில் சொல்லியிருந்தால் அது தவறானது என்றால் சரிதான். நான் என்னுடைய உறுதிகூற்றில் சீனிவாசன் தான் சமாதானம் பேச கூப்பிட்டதாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான்.

நான் எனது உறுதிகூற்றில் சொல்லியதுபோல் வட்டி இல்லாமல் ரூபாய் 4 லட்சம் மட்டும் போதும் என்று சீனிவாசன் கூறியதன் அடிப்படையில் சென்று இருந்தால் அது பொய் என்றால் சரிதான். சமாதானம் பேச போகும் போது புரோ நோட்டின் நகலை கையில் எடுத்துச் சென்றோம் என்றால் இல்லை. அவ்வாறு சமாதானம் பேச செல்லும் பொழுது புரோநோட்டை கையில் எடுத்துச் சென்று அதை எதிரி கிழித்துவிட்டதாக சொல்லி இருந்தால் அது பொய் என்றால் அது எனக்கு தெரியாது. இதற்கெல்லாம் நான் தான் நேரடி சாட்சி என்று எனது உறுதிகூற்றில் சொல்லியிருந்தால், அது தவறு என்றால் சரியல்ல. புரோநோட்டை நான் கொண்டு போகாத நிலையில், புரோநோட்டை கொண்டு சென்று எதிரியிடம் கொடுத்ததாகவும், அதை எதிரி பெற்றுக் கொண்டதாகவும் சொல்லியிருப்பது முன்னுக்குப்பின் முரணாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் புரோநோட்டை எதிரி பெற்றுக்கொண்டு, அதற்கு பதிலாக காசோலையை கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. புரோநோட்டு சட்டப்படியாக செயல்படுத்தக்கூடிய ஆவணம் என்றால் சரிதான். சட்டப்படியாக செயல்படுத்தக்கூடிய ஆவணம் ஏற்கனவே இருக்கும்போது அதற்கு ஈடாக அந்த ஆவணத்தை திரும்ப பெற்றுக் கொண்டு, அதற்கு ஈடாக காசோலையை எதிரி கொடுத்ததாக சொல்வது இந்த வழக்கில் வழக்கு மூலம் ஏற்படுத்துவதற்காக சொல்லப்பட்டது என்றால் சரியல்ல.

நான் வாதி வீட்டிற்கு பக்கத்து வீட்டுக்காரர் என்பதால், அவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. இதில் ரூபாய் 4 லட்சம் கடனாக வாங்க வேண்டிய தேவையும் அவருக்கு இல்லை, அவர் புகார்தாரரிடம் ரூபாய் 4 லட்சம் கடனாக வாங்கவும் இல்லை, அதற்கு ஈடாக காசோலையும், புரோநோட்டும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி ரூபாய் நான்கு லட்சம் வாங்க வேண்டிய தேவையும் இல்லை என்றாலும் சரி இல்லை. புகார்தாரருக்கும், எதிரிக்கும் இடையே கார் வாங்கியது சம்பந்தமாக ஏற்பட்ட பிரச்சனையை மனதில் வைத்துக் கொண்டு இருவரும் பாலிய நண்பர்கள் அடிப்படையில் அவரிடம் இருந்த காசோலையை தவறான காரணங்கள் கூறி சட்டப்படி செல்லத்தக்காக காரணங்களை கூறி எதிரியின் மீது இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது

**என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.**

**இவ்வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.**

| |
|---|
| Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.<br><br>District Munsif cum Judicial Magistrate,<br>Shenkottai |